


நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 25.02.2026 அன்று திருச்சிராப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற விழா நிகழ்வில் 3957 பயனாளிகளுக்கு ரூ.128.62 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன், ஸ்டாலின்குமார், மாவட்ட வருவாய் அலுவலர்ஆர்.பாலாஜி, திட்ட இயக்குனர் (மகளிர் திட்டம்) சுரேஷ், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்காகவும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும் நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 4.93 லட்சம் ரூபாய்க்கான உபகரணங்கள், காசோலைகளை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற டேக்வாண்டோ, தடகளம், நீச்சல் மற்றும் கால்பந்து போட்டிகளில் பதக்கங்கங்கள் வென்ற நரம்பியல்சார் மாற்றுத்திறனாளிகளான 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 24.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, பெருமூளை முடக்குவாத மாற்றுத்திறனாளி விளையாட்டு சங்கத்தின் தலைவர் திருமதி செ.உமாராணி, அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்ளனர்.




நன்னிலம் சட்டமன்ற தொகுதி மஞ்சக்குடியில் நடைபெற்ற 'தமிழ்நாடு தலைகுனியாது' பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர், விளையாட்டு மேம்பாட்டு அணி மநில செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன்எம்.எல்.ஏ., ஒன்றியசெயலாளர்கள்வீ.அன்பரசன்,ப.பிரபாகரன்,கோ.தெட்சிணா மூர்த்தி,எஸ்.ஜோதிராமன்,கேப்டன்செல்வராஜ், வே.மனோகரன்,நகரசெயலாளர்கள் பக்கிரிசாமி, ஏ.கே.டி. சேரன், பேரளம்தியாகு,மகளிரணி ஷோபாகணேசன், ரேவதிசதீஷ், இளம் பேச்சாளர்கள் தினேஷ், தேவதீரன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### தி.மு.க. சட்டத்துறை மேற்கு மண்டல

# வழக்கறிஞர் அணி தேர்தல் கலந்தாய்வுக் கூட்டம்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. - என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை !

கோவை, பிப்.28-

தி.மு.க.சட்டத்துறை மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி தேர்தல் கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் மண்டல பொறுப்பாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, கழக சட்ட துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

கரூர்,நாமக்கல்,ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கழக மாவட்டங்களுக்கான DLC, CLC, FLC வழக்கறிஞர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் இன்று (28.02.2026-சனிக்கிழமை ) காலை 10.00 மணியளவில் கோவை, கோல்ட் வின்ஸ், அவினாசி சாலையில் உள்ள ராமலக்ஷ்மி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

நிகழ்வுகளை மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.

மூத்த வழக்கறிஞர் மாநிலங்களவை உறுப்பினர்கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர் இளங்கோ அவர்கள் தலைமை உரையாற்றுகிறார்.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் தலைமை கழக வழக்கறிஞர்கள் வழக்கறிஞர் அணி மண்டல பொறுப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தல் குறித்த மிக முக்கிய ஆலோசனைக் கூட்டம் என்பதால் கழக மாவட்டம் வாரியாக வருகை பதிவேடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC)தங்கள் மாவட்டத்திற்கு உட்பட்ட கழக வழக்கறிஞர்களின் வருகை பதிவினை உறுதிப்படுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

